# இஸ்லாம் கூறும் இத்தா கோட்பாடுகளும், நடைமுறைகளும்: அடம்பன் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

## Theories and Practices of Iddah in Islam : A Study Based on Adampan Region

M.S.S. Begum[1], S.M.M. Nafees[2] & M.I. Nasrin[3]

[1,2,3] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka
shamilasalih95@gmail.com, drsmmnafees@gmail.com, nasrinmi418@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

பெண்களை மதித்து அவர்களை உயர்த்திய இஸ்லாமிய மார்க்கத்தில் பெண்களுக்கென்று தனித்துவமான விடயமாக இறைவனால் கட்டளையிடப்பட்ட விடயமே இத்தாவாகும். இத்தா தொடர்பான முழுத்தெளிவும் ஒவ்வொரு பெண்களும் கட்டாயமாக அறிந்திருக்க வேண்டும். இந்த வகையில் இவ்வாய்வானது இத்தா தொடர்பான முழுமையான தெளிவை வழங்குவதற்காக “ **இஸ்லாம் கூறும் இத்தா கோட்பாடுகளும், நடைமுறைகளும் : அடம்பன் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு”** எனும் தலைப்பில் அமையப்பெற்றுள்ளது. இவ்வாய்வானது அடம்பன் பிரதேசத்தில் இத்தாவிலிருக்கும் பெண்களின் நடைமுறைகளைப் பரீசீலித்தல் மற்றும் இத்தா தொடர்பான நடைமுறைகளை இஸ்லாமிய கண்ணோட்டத்தில் பகுப்பாய்தல் ஆகிய இரு நோக்கங்களைக் கொண்டதாக அமையப்பெற்றுள்ளது. இவ்வாய்வில் முதலாம் நிலைத்தரவுகளாக அடம்பன் பிரதேசத்தில் (2018 - 2020) இரண்டு வருட காலப்பகுதியில் கணவனை இழந்து இத்தாவிலிருந்த 10 பெண்களிடமும், தலாக் பெற்று இத்தாவிலிருந்த 15 பெண்களிடமும் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும் நேர்காணல்கள் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளாக இத்தா தொடர்பாக எழுதப்பட்ட புத்தகங்கள், முன்னைய ஆய்வுகள், சஞ்சிகைகள், காணொளிகள் மூலம் இத்தாவுடைய கோட்பாட்டு ரீதியான தகவல்கள் பெறப்பட்டுள்ளன. இறுதியில் இஸ்லாம் கூறும் இத்தா கோட்பாடுகளோடு, அடம்பன் பிரதேசத்தில் இத்தா இருக்கும் பெண்களின் நடைமுறைகளை ஒப்பிட்டு நோக்கும் போது அடம்பன் பிரதேசத்தில் இத்தாவிலிருக்கும் பெண்கள் ஓரளவு இஸ்லாமிய இத்தா கோட்பாடுகளைப் பின்பற்றுகிறார்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்** : இஸ்லாம், இத்தா கோட்பாடுகள், அடம்பன் பிரதேசம், நடைறைகள்

### ஆய்வுப் பின்னணி

மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் வழங்கியுள்ள இஸ்லாம் மனிதன் குடும்ப வாழ்விலும் நிம்மதியையும் அமைதியையும் பெற வேண்டும் என்பதற்காக பல வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. மனிதன் சமூகத்தின் உயிர்நாடி என்ற வகையில் அவனது உள்ளம் அமைதிப்பெற தூய குடும்ப அமைப்பை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. குடும்ப அமைப்புக்கள் உருவாக திருமணம் ஒரு பாலமாக அமையப்பெறுகிறது. ஒரு முஸ்லிம் தன் வாழ்வில் எடுக்கும் எல்லா முயற்சிகளும் குடும்ப அமைப்பில் மனதில் வைத்துக்

கொண்டே செயற்பட வேண்டும் என இஸ்லாம் கூறுகின்றது. (லதீப், 2009) திருமணம், குடும்பம் ஆகிய இரண்டும் இஸ்லாத்தின் சமூக அமைப்பின் மையங்களாகும். திருமணம் மார்க்கத்தில் அரைவாசியாகும். அது நபிவழிமுறை என்பதோடு அதன் மூலம் உருவாகும் குடும்பம் பல முக்கியத்துவங்களைக் கொண்டுள்ளன. அதைப் புறக்கணிக்கின்றவர் மார்க்கத்தை புறக்கணித்ததற்கு சமனாவார் என இஸ்லாம் கூறுகின்றது.

இஸ்லாமிய குடும்ப அமைப்பு மிக அழகானது, ஆழமானது. அதில் கணவன் - மனைவி இருவரின் கடமைகள், உரிமைகள் என்பன பற்றி பேசுகின்றன. அவர்களது கடமைகளை முறையாக பின்பற்றுமாறு கூறியுள்ளது. இவ்வாறு கூறப்பட்ட பெண்ணிற்கு என்று இறைவனால் ஏற்படுத்தப்பட்ட கடமையே இத்தாவாகும். இந்த வகையிலேயே பெண் தனது கணவனை இழந்தாலோ, அவரிடமிருந்து தலாக் பெற்றாலோ தனது நலன் கருதி சில காலங்கள் இத்தா (காத்திருத்தல்) வேண்டும். இத்தா என்பது (எண்ணிக்கை, கணிப்பு, இடைக்கால காத்திருப்பு) எனப்படுகிறது. கணவன் மரணித்தால் மனைவி நான்கு மாதமும் பத்து நாட்களும், தலாக் பெறப்பட்ட பெண் மூன்று மாதவிடாய்க்குட்பட்ட காலப் பகுதியிலும் மறுமணம் செய்யாமல் காத்திருக்க வேண்டும்.

கணவனை இழந்த பெண் கர்ப்பிணியாக இருந்தால் அவளுடைய இத்தா காலம் குழந்தை பிறக்கும் வரைக்கும் என தலாக்: 4ம் வசனத்திலும் அவ்வாறு இல்லாவிடில் நான்கு மாதமும் பத்து நாட்களும் இத்தா இருக்க வேண்டும் எனவும் அல்குர்ஆனில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதனால் கணவனை இழந்த பெண்ணின் இத்தா காலத்தில் அனைத்து இமாம்களும் ஒன்றுபடுகின்றனர். ஆனால் தலாக் பெறப்பட்ட பெண்ணின் இத்தா காலம் பற்றி மூன்று குரு (துஹ்ர்) உடைய காலங்கள் என்று கூறியதனால் இமாம் அ" ஹனீபா (ரஹ்) மூன்று மாதவிடாய் காலங்கள் என்றும் இமாம் ஷாபி∴ (ரஹ்) மூன்று சுத்தமான காலங்கள் கணக்கிட்டு இத்தா இருக்க வேண்டுமெனவும் குறிப்பிடுகின்றனர் (அப்துல் அஸீஸ், 2008 ). முஸ்லிமான பெண்ணின் கணவன் காபிராகிவிட்டால் அவர்களுடைய உறவு முறியக்கூடியதாக அமையும் அச்சந்தர்ப்பத்தில் அவள் இத்தா இருக்க வேண்டும். கணவன் மீண்டு இஸ்லாத்தில் நுழைந்து அவளோடு சேர்ந்து கொண்டால் இத்தா முடிவடைகிறது. இத்தா காலத்தில் கணவன் சேராவிட்டால் அவள் தனது இத்தாவைப் " ர்த்தி செய்துவிட்டு மறுமணம் செய்து கொள்ளமுடியும் (இப்னு பாஸ், 2017).

இன்றைய கால கட்டத்தில் இஸ்லாமிய நாடுகளைப் பொறுத்தவரையில் பெண்கள் இத்தா காலத்தில் மறுமணம் செய்யாது இத்தா இருக்கக் கூடியவர்களாகவும், ஐரோப்பிய, அமெரிக்க நாட்டுப் பெண்கள் இத்தா அனுஷ்டிக்காதவர்களாகவும் காணப்படுகின்றனர். ஏனெனில் அவர்களுடைய நாட்டு சட்டங்களில் இத்தா என்ற விடயம் காணப்படுவதில்லை. ஆனால் விவாகரத்து தீர்ப்பில் தம்பதிகள் மறுமணம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது ( Rostamy 2009 ).

இத்தாவானது பெண்ணுடைய கர்ப்பத்தை உறுதிப்படுத்தவும், கருவின் உரிமையைப் பராமரிக்கவும், பரம்பரையின் தெளிவின்மையைத் தவிர்க்கவும், திருமணம் புனிதமானது என்பதை உணர்த்துவதோடு தலாக்கினுடைய இத்தா எனில் கணவன் மனைவி மீண்டும் சேர்ந்து வாழ்வதற்கான சந்தர்ப்பமாகவும் காணப்படுகின்றது. இவ் உண்மையை இன்றைய

விஞ்ஞானம் கண்டுபிடித்துள்ளது. கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் நச்சுயியல் பேராசியரான டாக்டர் ஐமால் எடின் இப்றாஹீமின் கருத்துப்படி பெண்ணிண் நோயெதிர்ப்பு சக்தி குறைவாகக் காணப்படுவதாகவும் 120 நாட்களினுள் அப்பெண் இன்னொரு ஆணுடன் சேரும் போது பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் கூறுகின்றார் ( carny , 2017).

இலங்கையைப் பொறுத்த வரையில் எல்லாப் பிரதேசத்து முஸ்லிம் பெண்களும் மரண இத்தாவை அனுஷ்டிப்பவர்களாகவும், தலாக்கினுயை இத்தாவை அனுஷ்டிப்பவர்களாகவும் தங்களுடைய கணவர்களிடமிருந்து இத்தா தாபரிப்பைப் பெறக் கூடியவர்களாகவும் காணப்படுகின்றனர். இது தொடர்பாக மண நீக்கஞ் செய்யப்பட்ட மனைவியை பராமரிப்பது தொடர்பில் அல்குர்ஆன் தலாக் கூறப்பட்ட பெண்களுக்கு முறைப்படி பராமரிப்புப் பெறத்தகுதியுண்டு அவ்வாறு பராமரிப்பது இறையச்சமுடையவர்கள் மீது கடமையாகும் என்கிறது. " தலாக் கூறப்பட்ட பெண்களுக்கு முறைப்படி பராமரிப்புப் பெறத்தகுதியுண்டு." (அல்பகறா: 241) இப்பராமரிப்பு தொடர்பான வசனத்தை இஸ்லாமிய நாடுகள் இரண்டு விதமாக பொருள் கோடல் செய்துள்ளன. ஒன்று இத்தா காலம் முடியும் வரையான பராமரிப்பு மற்றொன்று விவாகரத்தின் போது மொத்தமாக வழங்கப்படும் மதா∴ எனும் பராமரிப்பாகும் (ஹஸனா, 2015).

இந்த வகையில் இவ்வாய்வுப் பிரதேசமான இலங்கையின் வடமாகாணத்தில் அமைந்துள்ள அடம்பன் பிரதேசத்தில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்கின்றனர். இங்கு வாழும் முஸ்லிம் பெண்களின் மத்தியில் இத்தா மேற்கொள்ளும் போது இஸ்லாம் வழிகாட்டிய அமைப்பில் நடந்து கொள்வதற்காகவும், தலாக் இத்தாவில் மற்றும் மரண இத்தாவில் இருப்பவர்களைக் கண்டறிந்து அவர்களுடைய இத்தா நடைமுறைகளையும், இஸ்லாம் கூறும் இத்தா கோட்பாடுகளையும் ஒப்பிட்டு இஸ்லாமிய இத்தா கோட்பாடுகளை அவர்கள் மத்தியில் தெளிவுபடுத்துவது காலத்தின் கட்டாயமாகக் காணப்படுகின்றது.

மேலும் அடம்பன் பிரதேசத்தில் இது வரையில் எவ்வித இஸ்லாமிய ஆய்வுகளும் மேற்கொள்ளப்படாதன் இடைவெளியை நிவர்த்தி செய்யும் முகமாகவும், அடம்பன் பிரதேசத்துப் பெண்களுக்கு இத்தா தொடர்பான " ரண தெளிவினை வழங்குவதற்காகவும். அடம்பன் பிரதேசத்தில் இத்தாவிலிருந்த பெண்களைக் கொண்டு இவ்வாய்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வானது அடம்பன் பிரதேச முஸ்லிம்களின் இத்தா தொடர்பான நடைமுறைகளைப் பரீசீலித்து அவர்கள் மத்தியில் காணப்படும் தவறான நடைமுறைகளைத் தெளிவுபடுத்தி, இஸ்லாமிய இத்தா கோட்பாடுகளைத் தெளிவுபடுத்துகின்றது.

**ஆய்வுப்பிரச்சினை**

அடம்பன் பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்கள் தமிழ் மக்களுடன் கலந்து வாழ்வதினால் அவர்கள் மத்தியில் இஸ்லாமிய செயற்பாடுகள் காணப்படுவது ஆகக் குறைந்த விடயமாகும். இதனால் பெண்கள் மத்தியில் இத்தா தொடர்பான தெளிவு மிகக் குறைவாகக் காணப்படுகிறது. மேலும் இத்தா தொடர்பான பிழையான கருத்துக்களும் தவறான செயற்பாடுகளும், பூரண தெளிவின்மையும் முஸ்லிம்கள் மத்தியில் காணக் கூடியதாக உள்ளது. எனவே தான் இவ்வாய்வு முஸ்லிம்கள் குறைவாக வாழும் அடம்பன் பிரதேசத்தில்

இத்தாவில் இருக்கும் பெண்களின் நடைமுறைகளைப் பரீசீலித்து அதனை இஸ்லாம் கூறும் இத்தா கோட்பாடுகளோடு தொடர்புபடுத்தி ஆராய்கின்றது.

**ஆய்வின் நோக்கம்**

- அடம்பன் பிரதேசத்தில் இத்தாவிலிருக்கும் பெண்களின் நடைமுறைகளைப் பரீசீலித்தல்.
- இத்தா தொடர்பான நடைமுறைகளை இஸ்லாமிய கண்ணோட்டத்தில் பகுப்பாய்தல்.

**ஆய்வு முறைமை**

**முதலாம் நிலைத் தரவுகள்**

- **வினாக்கொத்து**

இவ்வாய்விற்கான தரவுகள் அடம்பன் பிரதேசத்தில் 2018 – 2020 இரண்டு வருட காலப்பகுதியில் கணவன் மரணித்து இத்தாவில் இருந்த பெண்கள் 10 பேரிடமும், தலாக் பெறப்பட்டு இத்தாவில் இருந்த பெண்கள் 15 பேரிடமும் வினாக் கொத்து வழங்குவதன் மூலம் ஆய்விற்கான தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

- **நேர்காணல்**

இவ்வாய்விற்குரிய மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக அடம்பன் பிரதேசத்தில் காணப்படும் மார்க்க அறிஞர்கள், மாதர் சங்கப் பெண்கள், பெண் செயற்பாட்டாளர்களின் கருத்துக்களும் நேர்காணல் மூலம் பெறப்பட்டுள்ளன.

❖ **இரண்டாம் நிலைத் தரவுகள்**

இரண்டாம் நிலைத் தரவுகளாக இத்தா தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகை ஆக்கங்கள், முன்னைய ஆய்வுகள், ஒளி ,ஒலி நாடாக்கள், காணொலிகள் இறுவெட்டுக்கள், இணையத்தள ஆக்கங்கள் ஆகியன மீளாய்விற்குட்படுத்தப்பட்டு ஆய்வின் கோட்பாட்டு ரீதியான விளக்கங்களை முன்வைப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன.

**தரவுப் பகுப்பாய்வு**

ஆய்வுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் அனைத்தும் விபரிப்புப் புள்ளிவிபரவியல் மூலமாக பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு, இறுதியில் இவ்வாய்விற்காக சேகரிக்கப்பட்ட தரவுகளைக் கொண்டு இத்தா கோட்பாடுகளையும், நடைமுறைகளையும் ஒப்பீடு செய்து இஸ்லாமிய இத்தாக் கோட்பாடுகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வின் பரப்பெல்லை**

இவ்வாய்வின் எல்லையானது வடமாகாணத்தில் மன்னார் மாவட்டதில் மாந்தை மேற்குப்பகுதியில் அடம்பன் பிரதேசத்தை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது. இது 658 ச.கி மொத்த பரப்பளவைக் கொண்டதும் மொத்த சனத்தொகை சுமார் 90,857 மக்களைக்

கொண்டதுமான பிரதேசமாகும். இப்பிரதேசத்தின் கீழ் செயற்படும் சொர்ணபுரி, மினுக்கன், அடம்பன் கிராமத்தில் இத்தாவிலிருந்த முஸ்லிம் பெண்களிடம் தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

தமிழர்களை பெரும்பான்மையாகவும், முஸ்லிம்களையும், சிங்களவர்களையும் சிறுபான்மையாகக் கொண்டுள்ள இப் பிரதேசத்தில் அண்ணளவாக தமிழர்கள் 80,396 பேரும், முஸ்லிம்கள் 8,500 பேரும், சிங்களவர்கள் 1,961 பேரும் ஒற்றுமையாக வாழ்கின்றனர் இவர்களில் 10 மரண இத்தாவில் இருந்த பெண்களையும், 15 தலாக் பெறப்பட்டு இத்தாவில் இருந்த பெண்களும் ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

**இலக்கிய மீளாய்வு**

ஆய்வு ஒன்றினை மேற்கொள்வதற்கு முன் அவ்வாய்வு தொடர்பாக ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆக்கங்களையும், நூல்களையும் அவற்றின் பின்னணிகளையும், அடிப்படைகளையும் அறிந்து கொள்வது அவசியமாகும். மேலும் குறிப்பிட்ட ஆய்வானது காலத்திற்குப் பொருத்தமானதாக அமைவது அவசியமாகும். ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அடம்பன் பிரதேச முஸ்லிம்கள் மத்தியில் இஸ்லாமிய இத்தா கோட்பாடுகளும், நடைமுறைகளும் என்ற விடயம் தொடர்பான ஆய்வுகள் காணப்படாவிட்டாலும், இஸ்லாமிய இத்தா தொடர்பாக தனித்தனியாக ஆய்வாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

Busari mashood (2017) . **Iddatu't talaq and Iddatu'ul wafat. A Re literpretation of the phrase" hatta yalavna hamlahunna** இவ்வாய்வுக் கட்டுரையானது கணவன் மரணித்த இத்தாவிலும் தலாக் பெறப்பட்ட இத்தாவிலும் குழந்தை பிறக்கும் வரை என்ற அல்குர்ஆன் வசனத்தில் கூறப்பட்ட சொல்லை வைத்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது. ஒரு பெண் திடீரென கர்ப்பமாகாமல் இத்தா காலத்தில் அவள் கர்ப்பமாக இருக்கிறாள் என்பதை அறிவது அவளுக்கு ஆறுதல் அளிக்கக் கூடியதாகவும், அவளை சமூகத்தின் தவறான பேச்சுக்களிலிருந்து பாதுகாப்பதாகவும் அமைவதோடு அவளுடைய இத்தா பிரசவம் வரை நீடிப்பது அவள் மீது இறைவன் கொண்டுள்ள கருணை எனவும் இவ்வாய்வில் கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

Rahayu Mulia Romadoni (2019.07). **The Iddah Period as a Reason for Concellation of Marriage** எனும் ஆய்வில் முன் திருமணமாகாத எந்தப் பெண்ணும் இத்தாக் காலத்தைக் கடைபிடிக்க வேண்டும். திருமணத்தின் சட்ட நிபந்தனைகளில் ஒன்றாக இத்தாக் காலத்தை சரியாக முடிக்கத் தவறினால் அடுத்து மேற்கொள்ளப்படும் எந்த திருமணங்களும் ரத்து செய்யப்பட அனுமதி உண்டு. இந்தக் கட்டுரையானது இந்தோனேசியாவில் இத்தா தொடர்பாக நீதிபதிகள் வெளியிடும் சட்டங்கள் தொடர்பாக அலசுகின்றது. இந்தக் கட்டுரையானது நீதித்துறை முடிவு உள்ளிட்ட நேர்மறையான சட்டங்களின் அடிப்படையில் சட்ட ஆராய்ச்சியைப் பயன்படுத்துகின்றது. இந்தக் கட்டுரையானது சட்ட சிக்கல்களை எதிர்கொள்ளும் ஒரு சட்டவாதத்தை உருவாக்குவதற்காக சட்டத்தில் உருவாகும் கருத்துக்கள் மற்றும் கோட்பாடுகளிலிருந்து விலகும் நோக்கத்துடன் சட்ட ஆராய்ச்சிக்கான சட்ட மற்றும் கருத்தியல் அணுகுமுறைகளையும் வழக்கு ஆய்வு முறையையும்

பயன்படுத்துகின்றது. மேலும், இத்தாவின் நிலையைப் "ர்த்தி செய்யாமல் திருமணம் முடிப்பதற்குத் தயாரானால் அந்த திருமணம் ரத்து செய்யப்படல் வேண்டும் என்பது இவ்வாய்வின் முடிவாகக் கொள்ளப்பட்டுள்ளது.

Sa'idu Ibrahim Sulaiman, Anas Mohd Yunus (2020). **Factors That Causes Denial of Iddah (Waiting Period), Entitlements : A Cause Study of Kano State, Nigeria**. விவாகரத்து செய்யப்பட்ட மனைவியை கணவர் 3 மாதவிடாய் காலம் முடியும் வரையிலான இத்தாக் காத்திருப்புக் காலத்தில் அனுபவிக்க அனுமதிக்காத காரணங்களை அடையாளம் காண்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். இஸ்லாமிய சட்டத்தின் படி விவாகரத்துப் பெற்ற பெண் தனது இத்தாக்காலம் முடியும் வரையிலான காலப்பகுதியில் தனது கணவர் வீட்டில் தங்கியிருக்க வேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் கணவர் உணவு, உடை, தங்குமிடம் மற்றும் வேறு சில தேவைகளையும் வழங்க வேண்டும். விவாகரத்துப் பெற்ற ஆங்கிலம் மற்றும் ஹௌஸா மொழிகளில் பேசக்கூடிய 200 ஆண்கள் மற்றும் பெண்களுக்கு வினாத்தாள் வழங்கப்பட்டு இவ்வாய்வுக்கான தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Yusufi Roqayyah (2014). **The Concept of waiting period in Islam** எனும் ஆய்வில் இஸ்லாமிய ஆதாரங்களான அல்குர்ஆன், ஸுன்னா, மற்றும் நபித்தோழர்களை மையப்படுத்தி இத்தா தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. இவ்வாய்வில் இத்தாவின் தன்மை, அதன் பல்வேறு வகைகள் மற்றும் தத்துவங்கள் தொடர்பாக விரிவாகக் கூற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இஸ்லாத்தில் இத்தா என்பது ஒரு பெண் தனது கணவனின் மரணத்திற்குப் பிறகு அல்லது விவாகத்திற்குப் பிறகு அவளுடைய இத்தாக்காலம் முடியும் வரை வேறு ஓர் ஆணை திருமணம் செய்து கொள்ளக் கூடாது. சீர்திருத்தம், மறுபரிசீலனை, மீண்டும் திரும்புதல் போன்றவற்றிற்கான பொருத்தமான ஒரு வாய்ப்பாகவும் இத்தாவை இஸ்லாம் கருதுகின்றது. திருமண ஒப்பந்தத்தை முறித்த பின்னர் உருவாகும் சந்ததியினரின் தந்தையை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பாகவும் இத்தாவை இஸ்லாம் இத்தாவைக் கடமையாக்கியுள்ளது என்பதுவும் இவ்வாய்வில் முன்வைக்கப்பட்டுள்ளது.

Rostamy T.L (2009 ) **A Compare study of Iddah in Iran and other countries** எனும் ஆய்வுக் கட்டுரையானது விவாகரத்து மற்றும் இறப்பு இத்தாவின் போது மறுமணம் செய்வது அனுமதிக்கப்படுவதில்லை. மேலும் ஈரான் மற்றும் வேறு சில இஸ்லாமிய மற்றும் இஸ்லாம் அல்லாத நாடுகளின் இத்தா சட்டங்களை ஒப்பீடு செய்த பின்னர் இஸ்லாமிய நாடுகளில் பெண்கள் இத்தா அனுஷ்டிப்பதாகவும், ஐரோப்பிய அமெரிக்கச் சட்டங்களில் இத்தா என்ற விடயம் பெண்கள் மத்தியில் இல்லை ஆனால் இந்த நாடுகளில் விவாகரத்துத் தீர்ப்பில் தம்பதிகள் மறுமணம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது என்ற விதி காணப்படுவதாகக் கண்டுகொள்ளப்பட்டுள்ளது. ஆகவே இவ்வாய்வுக் கட்டுரையானது எனது ஆய்விற்கு இத்தா தொடர்பான இஸ்லாமிய மற்றும் மேற்கத்தேய நாடுகளின் கண்ணோட்டத்தை தெளிவுபடுத்தக் கூடியதாக அமைகிறது.

Hawting G.R (2009 ) எழுதிய **The role of quran and hadhidh in the legal controversy about the rights of a divorced woman during her waiting period " iddah"** எனும் ஆய்வுக் கட்டுரையில் விவாகரத்துச் செய்யப்பட்ட மனைவி தனது முன்னாள் கணவரின் உரைவிடத்திலிருந்து காத்திருக்க வேண்டும். இதன் காரணமாக கணவன் மனைவி உறவு மீண்டும் தொடர்வதற்கு சந்தர்ப்பமாகக் காணப்படுவதோடு இஸ்லாம் திருமணத்தின் மகிமையையும், கணவன், மனைவியின் தொடர்பை எந்தளவிற்கு கண்ணியப்படுத்தியுள்ளது என்பதை அவர்கள் இருவருக்கும் உணர்த்தக் கூடிய காலமாக இக் காத்திருப்புக் காலம் உணர்த்துகிறது. ஆகவே இவ்வாய்வுக் கட்டுரையானது விவாகரத்து இத்தா தொடர்பான விடயங்களை தெளிவுபடுத்தக் கூடியதாக அமைந்துள்ளது.

Steem carny (2017) எழுதிய **Wisdom of iddah can prevent cervical cancer** எனும் ஆய்வுக் கட்டுரையில் இத்தாவின் விஞ்ஞான உண்மைகள் பற்றிய முடிவுகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. பெண்ணிண் நோயெதிர்ப்பு சக்தி குறைவாகக் காணப்படுவதாகவும் 120 நாட்களினுள் அப்பெண் இன்னொரு ஆணுடன் சேரும் போது பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், இவ் உண்மைகளுக்காகவே இஸ்லாம் இத்தாவை 1400 வருடங்களுக்கு முன்னர் இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஹிக்மத் என கூறப்பட்டுள்ளது. இவ் ஆய்வுக்கட்டுரையானது இத்தாவும் விஞ்ஞானமும் என்ற பகுதியை " ரணப்படுத்துவதற்கு உறுதுணையாக அமைந்துள்ளது.

அபுல் ஹஸன் எம்.கே.ஈ (1973) அவர்களால் எழுதப்பட்ட **("இஸ்லாத்தில் சீதனம் (கைக்கூலி) அனுமதிக்கப்பட்டதா? விதவை எவ்வாறு இத்தா அனுஷ்டிக்க வேண்டும்?")** எனும் நூலில் மவ்துடைய இத்தாவின் விளக்கம், இத்தாவின் நோக்கம், இத்தாவில் புகுத்தப்பட்டுள்ள நூதனங்கள், இத்தா அனுஷ்டிப்பவருக்குரிய விதிமுறைகள் பற்றி மிகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இப் புத்தகத்தில் மவ்துடைய இத்தா பற்றிய தெளிவு காணப்படுவதனால் இந்நூல் இவ்வாய்விற்கு துணை செய்கின்றது.

சூளனி கொடிகார (1999) எழுதிய **("இலங்கையின் முஸ்லிம் குடும்பச் சட்டம் கொள்கை நடைமுறை மற்றும் பெண்கள் தொடர்பான அக்கரைக்குரிய விடயங்கள்")** எனும் நூலில் இலங்கை முஸ்லிம் குடும்ப சட்டத்தின் கோட்பாடுகள் செயற்பாடுகள் ஆராயப்பட்டுள்ளன. மேலும் விவாகரத்தின் மீதான இணக்கப்பாடுகள் தீர்வுகள் எனும் பகுதியில் இத்தா தாபரிப்பு தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆகயால் இவ்வாய்வுக்கு இத்தா தாபரிப்பு தொடர்பான விடயங்களுக்கு இந்நூல் துணையாக அமைந்துள்ளது.

மஸாஹிர் எஸ்.எம்.எம், சிமாரா எம்.என்.எம் ஆகியோரால் எழுதப்பட்ட **"இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தில் பராமரிப்பும் அதன் நடைமுறையும்"** என்ற ஆய்வுக் கட்டுரையில் விவாகரத்துப் பெறப்பட்ட பெண் தனக்குத் தேவையான இத்தா தாபரிப்பை தனது இத்தாக் காலத்தில் கணவனிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். இதனைப் பெற்றுக் கொடுப்பது காழியின் கடமை என இத்தா பராமரிப்பு தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது. ஆகவே

இவ்வாய்வுக் கட்டுரையானது எனது ஆய்வின் தலாக்கினுடைய இத்தா பராமரிப்புத் தொடர்பான விடயங்களை தெளிவுபடுத்துவதற்கு துணையாக அமைந்துள்ளது.

**பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

**இஸ்லாமிய இத்தா கோட்பாடுகளும், அடம்பன் பிரதேசத்து இத்தா நடைமுறைகளும் ஒப்பீடு**

இத்தா என்பது எண்ணிக்கை, கணிப்பு, இடைக்கால காத்திருப்பு என சொல் விளக்கம் கூறப்படுகின்றது. ஒரு கணவன் தன் மனைவியை விவாகரத்துக் கூறுகின்ற போதும், கணவன் மரணித்த பின்னரும் மனைவியின் நடவடிக்கைகள், செயல்கள் முன்பிருந்ததை விட வேறுபட்டிருக்க வேண்டுமென்று இஸ்லாம் எதிர்பார்க்கின்றது.

இத்தாவானது கணவனை இழந்த துக்கத்திற்காகவும், தன் முன்னைய கணவனால் கருவுற்றிருக்கிறாளா? இல்லையா? என்பதை உறுதிப்படுத்தவும், கருவின் உரிமையைப் பராமரிக்கவும், பரம்பரையின் தெளிவின்மையைத் தவிர்க்கவும், திருமணம் புனிதமானது என்பதை உணர்த்துவதோடு, தலாக்கினுடைய இத்தாவாக இருந்தால் கணவன், மனைவி மீண்டும் சேர்ந்து வாழ்வதற்கான சந்தர்ப்பமாகவும் காணப்படுகின்றது.


கணவனை இழந்த பெண்ணின் இத்தா பற்றி அல்குர்ஆனில் கூறும் போது **"உங்களில் எவரேனும் மனைவியரைவிட்டு மரணமடைந்து விட்டால் அவருடைய மனைவியர் நான்கு மாதம் பத்து நாட்கள் தாமாகக் காத்திருக்க வேண்டும்."** (அல்குர்ஆன்:2:234 ) ஆகவே கணவனை இழந்த பெண் கட்டாயமாக நான்கு மாதம் பத்து நாட்கள் இத்தாவில் காத்திருக்க வேண்டும்.

தலாக் பெறப்பட்ட பெண்ணின் இத்தா காலம் குறித்துக் கூறும் போது ''**தலாக் சொல்லப்பட்ட பெண்கள் மூன்று மாதவிடாய்கள் ஆகும் வரை தாமாகவே பொறுத்திருக்க வேண்டும்."** (அல்குர்ஆன்:2:228) இதுவே இத்தா இருக்கும் பெண்களின் இஸ்லாம் கூறும் கால வரையாகும்.

| வயது | வீதம் |
|---|---|
| **24-34** | 27% |
| **35-45** | 33% |
| **45-55** | 27% |

அடம்பன் பிரதேசத்து பெண்களின் இத்தாக் காலம் கணவன் மரணித்த இத்தாவாக இருந்தால் நான்கு மாதமும் பத்து நாட்களாகவும், தலாக் பெறப்பட்டால் மூன்று மாதவிடாய் காலமாகவும் காணப்படுகின்றது. ஆகவே அவர்களின் இத்தாக் காலம் இஸ்லாம் கூறும் அமைப்பில் காணப்படுகின்றது. இவ் அட்டவணையின் அடிப்படையில் தலாக் பெறப்பட்ட பெண்களில் 27மூ மானவர்களே 45-55 வயது முதிர்ந்த, மாதவிடாய் ஏற்படாத மூன்று மாதங்கள் இத்தாவில் இருந்த பெண்களாவர்கள். ஏனைய அனைவரும் மூன்று மாதவிடாய்க் காலங்கள் இத்தாவிலிருந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.


தலாக் கூறப்பட்ட பெண் இத்தா காலம் முடியும் வரை கணவனுடைய வீட்டிலேயே வசிப்பது கட்டாயமாகும். அந்த இடத்தை விட்டு அவள் வெளியேறுவதற்கோ அங்கிருந்து அவளை கணவன் வெளியேற்றுவதற்கோ அனுமதி கிடையாது. தலாக் அல்லது கணவனின் மரணத்தால் ஏற்படும் பிரிவோ கணவனுடைய வீடு அல்லாத ஓரிடத்தில் நிகழ்ந்தால் சம்பவம் அறிந்த உடனே அவள் கணவனுடைய வீட்டிற்கு சென்று இத்தாவை அனுஷ்டிக்க வேண்டும். இது பற்றி அல்குர்ஆனில் கூறும் போது **"நபியே நீங்கள் பெண்களை விவாகரத்துச் செய்வீர்களாயின் அவர்களின் (இத்தா காலத்தை நிர்ணயிக்க) வசதியாக விவாகரத்துச் செய்யுங்கள். மேலும் இத்தாவின் காலத்தைச் சரியாகக் கணக்கிடுங்கள். மேலும் உங்கள் இறைவனாகிய அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். இத்தாக் காலத்தில் அப்பெண்களை அவர்களின் இல்லங்களிலிருந்து நீங்களும் வெளியேற்ற வேண்டாம், அவர்களாகவும் வெளியேற வேண்டாம். அவர்கள் ஏதேனும் வெளிப்படையான மானக்கேடான செயல்கள் செய்தாலே தவிர இவை அல்லாஹ்வினால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளாகும். யாரேனும் அல்லாஹ்வின் வரம்புகளை மீறுவாராயின் திண்ணமாக அவர் தனக்குத் தானே அநியாயம் செய்தவராவார்."(**அல்குர்ஆன்- 65:1**)** இந்த இறை வசனத்தின் அடிப்படையில் எவ்வகை இத்தாவாக இருந்தாலும் பெண்ணானவள் கணவன் வீட்டிலேயே அனுஷ்டிக்க வேண்டும். மரண இத்தாவாக இருந்தால் கணவனை நினைவுபடுத்தக் கூடியதாகவும், அவருக்காக பிராத்திக்கும் சந்தர்ப்பமாக அமைகின்றது. தலாக்கினுடைய இத்தாவாக இருந்தால் கணவன் மனைவி புரிந்துணர்வுடன், மீண்டும் இருவரும் சேர்ந்து வாழக் கூடிய சந்தர்ப்பமாகக் காணப்படுகின்றது.




அடம்பன் பிரதேசத்தில் கணவன் மரணித்து இத்தாவிலிருக்கும் பெண்களைப் பொறுத்த வரையில் இவர்கள் தங்களது கணவன் வீட்டிலேயே இத்தாக் காலத்தை கழிக்கின்றனர். ஆனால் தலாக்கினுடைய இத்தாவை அனுஷ்டிக்கும் பெண்களில் 67மூ கணவனது வீட்டிலும் 33மூ ஆனவர்கள் தங்களுடைய வீட்டிலும் இத்தாவை அனுஷ்டிக்கின்றனர். ஏனெனில் அவர்கள் தங்களது கணவனை விட்டுப் பிரிந்தாக வேண்டும் என்ற காரணங்களைக் கூறுகின்றனர். இவர்களது இந்த எண்ணம் முற்றிலும் இஸ்லாத்திற்கு மாற்றமாகக் காணப்படுகின்றது. அவர்களுக்கு தலாக்கின் பார தூரத்தையும் இறைவனிடத்தில் வெறுக்கப்பட்ட ஹலாலான விடயம் தலாக் என்றும் முடிந்த வரையில் கணவனுடன் சேர்ந்து வாழ முயற்சிக்க வேண்டும் என்ற அறிவுரைகள் வழங்கப்பட்டன.

நகை அணிதல், அலங்காரத்திலிருந்து தவிர்தல் நபி (ஸல்) கூறும் போது ‘‘ கணவன் அன்றி வேறு யார் மரணித்தாலும் ஒரு பெண் மூன்று நாட்களை விட அதிகமாக துக்கம் கடைப்பிடித்தல் கூடாது. ‘‘கணவன் மரணித்தால் நான்கு மாதமும் பத்து நாட்களும் இத்தா இருக்க வேண்டும். அப்போது வண்ண மயமான ஆடைகளை அணியக் கூடாது. பகட்டு இல்லாத சாதாரண ஆடைகளையே அணிய வேண்டும். அவ் வேளையில் கண்களுக்கு சுர்மா போடுதல், நறுமணம் ” சுதல், மருதாணி இடுதல், முடி அலங்காரம் செய்தல் ஆகியவைகள் செய்தல் கூடாது. மாதவிடாயிலிருந்து தூய்மையடையும் போது மாத்திரம் சிறிது குஸ்த், அழ்பர் போன்ற நறுமணப் பொருட்கள் பயன்படுத்தலாம்’’(புகாரி -முஸ்லிம்)

இத்தாக் காலத்தில் பெண்களின் அலங்காரமாகக் கருதப்படும் நகைகள், கண் மை, பட்டு தடுக்கப்பட்டுள்ளது. இவை கணவனுடைய கவலைக்காக செய்யப்படும் விடயங்களாகும். இவற்றை செய்யாது நிறுத்திக் கொள்வதன் மூலம் பெண் தனது துக்கத்தை வெளிப்படுத்த வேண்டும். “ **ஒரு பெண் நபியவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே எனது மகளின் கணவர் இறந்து விட்டார். தற்போது அவள் கண்நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறாள் எனவே அவளது கண்களுக்கு சுர்மா இட முடியுமா? எனக் கேட்டாள். அதற்கு நபியவர்கள் முடியாது எனக் கூறினார்கள். அப் பெண் மூன்று, நான்கு தடவைகள் திருப்பித் திருப்பி கேட்ட போதும் நபியவர்கள் முடியாது என்றே பதிலளித்தார்கள். நான்கு மாதங்களும் பத்து நாட்களும் அவள் அவ்வாறே இருக்க வேண்டும் என்றும் ஜாஹிலிய்யக் காலத்தில் பெண்கள் ஒரு வருடம் பொறுத்திருந்ததை நினைவுபடுத்தினார்கள்.” (**உம்மு ஸலமா (ரழி)**)**




மேலே உள்ள வரைபு அடம்பன் பிரதேசத்துப் பெண்கள் தமது இத்தாக்காலங்களில் மேற்கொள்ளும் அலங்காரம் தொடர்பாக தெளிவுபடுத்துகின்றது. அதாவது 30 வீதமான பெண்கள் தாம் அலங்காரம் மேற்கொள்வோராயும், 70 வீதமான பெண்கள் தாம் எந்த அலங்காரங்களையும் மேற்கொள்வதில்லை எனவும் கருத்துத் தெரிவித்துள்ளனர். அடம்பன் பிரதேசத்துப் பெண்கள் இவ்வாறான செயற்பாடுகளிலிருந்து தவிர்ந்து தமது இத்தாவை அனுஷ்டிக்கின்றனர். ஆனால் தாம் துக்கம் அனுஷ்டிப்பதற்காக வெள்ளை ஆடைகளை அணிவதாகவும், தமது தொடர் செயற்பாடுகளாகவும் கூறுகின்றனர். பொதுவாக அனைத்துப் பெண்களும் இந்த ஆடையை அணிகின்றனர். ஆனால் இஸ்லாம் இத்தாவிலிருக்கும் பெண்களுக்கென்று பிரத்தியேக ஆடையை வழியுறுத்தவில்லை இவற்றிலிருந்து தவிர்ந்து

கொள்ளுமாறு அவர்களுக்கு வழிகாட்டப்பட்டது. இவை இஸ்லாம் கூறாத விடயமாகும். பெண்கள் அழகிய ஆடை அணிவதிலிருந்து தான் தவிர்ந்து கொள்ள வேண்டும் மாறாக தங்களுக்கென்று பிரத்தியேக வெள்ளை ஆடை அணிந்து பித்அத்துக்களை உயிர்ப்பிப்பதிலிருந்து தவிர்ந்து கொள்வது மிகச் சிறந்ததாகும் என்ற அறிவுரைகளும் வழங்கப்பட்டன.

ஒரு பெண் இத்தாவிலிருக்கும் போது அவளுக்கு வெளிப்படையான நிலையில் திருமணப் பேச்சு வார்த்தை நடத்தக் கூடாது ஆனால் மறைமுகமான அமைப்பிலோ சிலேடையாகவோ விருப்பத்தை உணர்த்த முடியும். இது பற்றி அல்குர்ஆனில் கூறும் போது '' **இத்தா இருக்கும் யாதொரு பெண்ணை நீங்கள் திருமணம் செய்து கொள்ளக் கருதினால், உங்களுக்குள் திருமண விருப்பத்தை நீங்கள் மறைமுகமாக அறிவிப்பதனாலோ, உங்கள் மனதில் மறைவாக வைத்துக் கொள்வதனாலோ உங்கள் மீது குற்றமில்லை. (ஏனெனில், நீங்கள் உங்கள் எண்ணத்தை இத்தா முடிந்த பின்) அவர்களிடம் நிச்சயமாகக் கூறுவீர்கள் என்பதை அல்லாஹ் நன்கறிவான். ஆதலால், நீங்கள் கண்ணியமான முறையில் மறைமுகமாகக் கூறுவதைத் தவிர (இத்தாக் காலத்தில் திருமணத்தைப் பற்றி) அவர்களுடன் இரகசியமாகவும் வாக்குறுதி செய்து கொள்ளவும் நாடாதீர்கள். உங்கள் மனதில் உள்ளவற்றை நிச்சயமாக அல்லாஹ் அறிவான். என்பதை நீங்கள் உறுதியாக அறிந்து அவனுக்குப் பயந்து கொள்ளுங்கள். இத்தகைய எண்ணத்தை தவிர்த்துக் கொண்டால் நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்போனும் மிகப் பொறுமையுடையோனுமாக இருக்கிறான் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.' " (**அல்குர்ஆன் 2:235**)**

இவ்வசனம் இத்தாவிலிருக்கும் ஒரு பெண்ணிடம் மறைமுகமாகத் திருமண விருப்பத்தைத் தெரிவிப்பதில் தவறில்லை எனக் கூறுகிறது. எனவே எனக்குத் திருமணம் முடிக்கின்ற தேவை இருக்கின்றது அல்லது ஸாலிஹான பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன். என்ற வார்த்தைகளினூடாக அப்பெண்ணிற்கு உணர்த்தலாம். எனவே இத்தாவிலிருக்கும் ஒரு பெண்ணிடம் திருமண விருப்பத்தைப் பகிரங்கமாக தெரிவிப்பதும், இரகசியமான முறையில் அவளுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதனையும் இஸ்லாம் தடை செய்துள்ளது.

இஸ்லாமிய இத்தா கோட்பாடுகளுள் மிக முக்கியமான கோட்பாடே இத்தாவிலிருக்கும் பெண்ணிற்கு திருமணம் பேசுவதோ, திருமணம் முடித்தலோ தடை செய்யப்பட்டுள்ளது. ஏனெனில் இதன் பின்னால் இறைவன் பல தூர நோக்குடைய ஹிக்மத்தை மறைத்துக் கூறுகின்றான். அதாவது தலாக் கூறப்பட்ட பெண் இத்தாவிலிருக்கும் போது அவள் முன்னைய கணவனின் கீழே இருக்கின்றாள், அவளை அவனது கணவன் மீட்டிக் கொள்ளவும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. இச் சந்தர்ப்பத்தில் அவளுக்கு இன்னொரு திருமணம் பேசும் போது அவளுடைய குடும்ப வாழ்வில் பாரிய பிளவுகள் ஏற்பட வழி வகுக்கின்றது. இன்னும் அவளுக்கு கணவன் வீட்டார் புறத்திலிருந்தும், சமூகத்திலிருந்தும் தவறான செய்திகள் உருவாவதற்கும், தீய பெயர்கள் வருவதற்கும் வழிவகுக்கின்றது.

கணவனை இழந்த பெண்ணாக இருந்தால் அவள் கணவனின் துக்கத்திலிருந்து மீண்டு வராத காலமாகக் காணப்படும். இச்சந்தர்ப்பத்தில் அவளுக்கு திருமணம் பேசும் போது அவள்

விரக்தியடையக் கூடும். அவளது இத்தாக் காலம் முடிந்து அவளாக தனக்கு இன்னொரு கணவனின் தேவையை உணரும் போது அவள் திருமணம் செய்து கொள்ள முடியும்.

இக்காலத்தில் இரு வகைப் பெண்களும் திருமணம் செய்து கொண்டால் அவர்களுடைய பரம்பரையில் குழப்பங்கள் ஏற்படும். அவளின் முன்னைய கணவனின் தடையங்கள் அவளிடம் இருந்து மூன்று மாதங்களின் பின்னரே இல்லாமலாக்கப்படும். இச்சந்தர்ப்பத்தில் அவள் இன்னொரு திருமணம் செய்யும் போது குழந்தை எந்தக் கணவனுடையது என்பதை அறிவதில் பிரச்சினை ஏற்பட்டு குழந்தையின் வாழ்விலும் பிரச்சினைகள் ஏற்படும். மேலும் பெண்ணாணவள் நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவளாகக் காணப்படுகின்றாள் கணனுடைய தடையங்கள் அழியாமல் இன்னொருவருடன் சேரும் போது அவளுடைய உடலில் பாதிப்பை ஏற்படுத்தும்.

இவ் இஸ்லாமிய இத்தாக் கோட்பாட்டுடன் அடம்பன் பிரதேசத்து பெண்களின் நடைமுறைகளைப் பார்க்கும் போது நான்கு மாதமும் பத்து நாட்களும் திருமணப் பேச்சு வார்த்தைகளிலிருந்தும், திருமணம் செய்வதிலிருந்தும் தவிர்ந்து கொள்கின்றனர்.

இத்தா இருப்பவள் அவளுடைய தேவைகளுக்காக பகல் பொழுதில் வெளியே செல்லலாம் அவள் மணவிலக்குச் செய்யப்பட்டவளாகவோ, கணவனை இழந்தவளாகவோ இருக்கலாம்.

‘‘எனது தாயின் சகோதரி பாயின் தலாக் சொல்லப்பட்ட போது, வெளியே சென்று அவருடைய ஈத்தப்பழ மரங்களை வெட்டத் துவங்கினார். அதைகக்ண்ட ஒருவர் அவரைத் தடுத்தார். அவர் அதனை நபி (ஸல்) அவர்களிடம் கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் ‘‘நீங்கள் வெளியே சென்று ஈத்தப்பழ மரங்களை வெட்டுங்கள். அதிலிருந்து நீங்கள் தானம் செய்யவோ நற்கருமங்கள் செய்யவோ கூடும்.’’ (ஜாபிர் (ரலி), நஸயி)

முஜாஹித் (ரஹ்) கூறுகின்றார்கள் : உஹுத் போரில் நிறைய நபித் தோழர்கள் ஷஹீத் ஆனார்கள் அவர்களுடைய மனைவியர் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்து ‘‘அல்லாஹ்வின் தூதரே இரவு நேரங்களில் நாங்கள் தனிமையை உணர்கின்றோம் ஆகவே எங்களில் யாருடைய வீட்டிற்காவது நாங்கள் சென்று இரவு தங்கிக் கொள்ளலாமா? நேரம் புலர்ந்தால் நாங்கள் எங்களுடைய வீடுகளுக்கு திரும்பி விடுகின்றோம் என அனுமதி கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் உறங்க வேண்டும் என்று தோன்றும் வரை உங்களில் எவருடைய இடத்திற்காவது சென்று நீங்கள் பேசிக்கொண்டிருங்கள். தூக்கம் வந்தால் ஒவ்வொருவரும் அவரவர்களுடைய வீடுகளுக்குச் செல்லுங்கள்.’’ எனக் கட்டளையிட்டார்கள்.

இரவில் வெளியே செல்வது சந்தேகங்களுக்கும், அவதூறுகள் பரவுவதற்கும் வழிகோலும் என்பதனாலேயே சொந்த வீட்டில் அல்லாமல் வேறு வீட்டில் இரவு தங்குதல் கூடாது. அவசியத் தேவை இருந்தால் மட்டுமே அவள் இரவில் வெளியே செல்ல வேண்டும். ஏனெனில் பகலைப் போன்றல்ல, இரவு குழப்பங்களுக்கு சாத்தியமான நேரமாகும். பகல் பொழுது வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும், அத்தியவசிய சாதனங்களை வாங்குவதற்கும் உகந்த நேரமாகும். இத்தாவை மிகக் கடுமையாக நோக்கிப் பார்க்கும் சிலர் அவள் வெளியே செல்வதை இஸ்லாம் முற்றாகத் தடை செய்ததாகக் கூறி

முடக்கிவிடுகின்றனர். இது தவறான நம்பிக்கையாகும் இஸ்லாம் மிக இலகுவான மார்க்கமாகும். உண்பதற்கு வசதியே இல்லாத போது அவள் வெளியேறி உழைக்க முடியும் இதற்கு நபி (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள்.

மேலும் இத்தாவிலிருக்கும் பெண் தொழுகைக்காக பள்ளிக்குச் செல்வதோ, ஹஜ் உம்ரா போன்ற காரணங்களுக்காக வெளியே செல்வதோ இஸ்லாத்தின் நோக்கில் ஏற்புடையதல்ல, ஏனெனில் குறிப்பிட்ட காலவரையரையுடன் இத்தா தவறிப் போகக் கூடியது ஆனால் ஹஜ் உம்ரா தவறிப் போகக் கூடியதல்ல. என்று இஸ்லாம் இத்தாவை குறிப்பிட்ட காலத்தில் அனுஷ்டிக்குமாறு வழியுறுத்தியுள்ளது.

இஸ்லாமிய ஷரீயாவானது விவாகரத்துப் பெற்ற மனைவியின் பராமரிப்பு பற்றி தெளிவான சட்ட விதிகளைக் கொண்டுள்ளது. ஒரு மனைவி தன் கணவனால் தலாக் சொல்லப்பட்டு அவள் மீட்டுக்கொள்ள முடியுமான ரஜ்இய்யத்தான தலாக்கின் இத்தாவில் இருக்கும் போது அவளுக்குரிய பராமரிப்பினை கணவன் செலுத்துவதற்கு கடமைப்பட்டுள்ளான். மேலும், இத்தகைய இத்தாவின் போது குறித்த மனைவி தன் கணவன் வாழ்கின்ற வீட்டிலேயே தானும் வசிக்க வேண்டும். இதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுப்பது கணவனின் பொறுப்பாகும்.

இது பற்றி அல்குர்ஆனில் பின்வருமாறு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. **“நபியே (நம்பிக்கையாளரகளை நோக்கி நீங்கள் கூறுங்கள்) நீங்கள் உங்கள் மனைவிகளை தலாக் கூற விரும்பினால் அவர்களின் இத்தாவின் ஆரம்பத்தில் கூறி இத்தாவைக் கணக்கிட்டு வாருங்கள். இவ்விடயத்தில் உங்கள் இறைவனாகிய அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து நடந்து கொள்ளுங்கள். நீங்கள் தலாக் கூறிய பெண்கள் பகிரங்கமாக யாதொரு மானக்டோன காரியத்தைச் செய்தாலன்றி அவர்களை அவர்கள் இருக்கும் உங்களுடைய வீட்டிலிருந்து இத்தாவுடைய காலம் முடிவடைவதற்கு முன்னர் நீங்கள் வெளியேற்றி விட வேண்டாம். இவை தாம் அல்லாஹ் ஏற்படுத்திய வரம்புகள். எவர்கள் அல்லாஹ்வுடைய வரம்புகளை மீறுகின்றார்களோ அவர்கள் தமக்குத் தாம் தீங்கிழைத்துக் கொள்கின்றனர். இதிலுள்ள நன்மையை உங்களுக்கிடையில் (சமாதானத்திற்குரிய) யாதொரு வழியையும் அல்லாஹ் ஏற்படுத்திவிடக்கூடும்.” (**அல்குர்ஆன் -அத்தலாக்:1**)**

தலாக் சொல்லப்பட்ட நிலையில் குறித்த தன் மனைவி கர்ப்பிணியாக இருப்பின் அவள் ரஜ்இய்யத்தான கணவனால் மீட்டுக்கொள்ள முடியுமான தலாக்கிற்குரிய இத்தாவில் இருக்கும் பொழுதோ, அல்லது தலாக் பாயின் எனப்படும் கணவனால் மீட்க முடியாத தலாக்கிற்கான இத்தாவில் இருக்கும் போதோ குறித்த விவாகரத்துப் பெற்ற மனைவி கர்ப்பிணியாக இருப்பின் அக்குழந்தையை அவள் பிரசவிக்கும் வரையில் கணவனிடமிருந்து தாபரிப்பினைப் பெற்றுக் கொள்ள உரித்துடையவளாகக் காணப்படுகிறாள்.

இக்கால எல்லையினுள் ஒரு மனைவிக்கான தாபரிப்புக்குச் சமமான அளவு தாபரிப்பினை விவாகரத்துப் பெற்ற பெண் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதுடன் கணவனின் வருமானத்திற்கேற்றவாறு உறையுள், உணவு, உடை மறறும் ஏனைய விடயங்களுக்கும் அப்பெண் உரித்துடையவளாகவே காணப்படுகிறாள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இது பற்றி அல்குர்ஆன் தெளிவான கட்டளைகளை விதித்துள்ளது. **“தலாக் கூறிய பின்னர் இத்தா**

**இருக்க வேண்டிய உங்களுடைய பெண்களை உங்களால் ஆன வரையில் நீங்கள் இருக்குமிடத்திலேயே வசித்திருக்கும்படி செய்யுங்கள். அவர்களை நிர்ப்பந்திக்கக் கருதி துன்புறுத்தாதீர்கள். அவர்கள் கர்ப்பமான பெண்களாக இருந்தால் குழந்தையை பிரசவிக்கும் வரையில் அவர்களுக்குச் செலவு கொடுத்து வாருங்கள். பிரசவித்ததன் பின்னர் குழந்தைக்கு உங்களுக்காக அவர்கள் பாலூட்டினால் அதற்குரிய கூலியை அவர்களுக்கு கொடுத்து விடுங்கள் இதைப் பற்றி முன்னதாகவே உங்களுக்குள் பேசி முடிவு செய்து கொள்ளுங்கள். இதில் உங்களுக்கு சிரமம் ஏற்பட்டால் அக்குழந்தைக்கு மற்றவளைக் கொண்டும் பால் கொடுக்கலாம்.'' (**அல்குர்ஆன்-அத்தலாக்: 6**)**

மேலும் தலாக் சொல்லப்பட்ட மனைவி தன் குழந்தைகளுக்கு பாலூட்டும் விடயத்தில் தான் விரும்பினால் பால் குடி மறக்கடிக்கும் கால எல்லை வரையில் தான் பாலூட்டியமைக்கான பராமரிப்பினை குறித்த தந்தையிடம் கேட்டுப் பெற்றுக் கொள்வதற்கு இஸ்லாம் உரிமையினை வழங்கியுள்ளது. இது தொடர்பில் அல்குர்ஆனின் பின்வரும் வசனம் தெளிவுபடுத்துகின்றது. **''எவரேனும் தலாக் கூறப்பட்ட மனைவிகளிடம் தங்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்கு தலாக் கூறப்பட்ட மனைவிகளைக் கொண்டே பாலூட்டுவதை முழுமையாக்க விரும்பினால் தாய்மாரக்ள் தங்களுடைய குழந்தைகளுக்கு இரண்டு ஆண்டுகள் வரை முழுமையாகப் பாலூட்டுவார்கள். தவிர, அத்தாய்மார்கள் பாலூட்டும் வரையில் அவர்களுக்கு ஆடையும்,உணவும் முறைப்படி கொடுத்து வருவது குழந்தையின் தந்தை மீது கடமையாகும்.''**

**யாதொரு ஆத்மாவும் அதன் சக்திக்கு மேல் செய்யும் படியாக நிர்பந்திக்கப்படமாட்டாது. ஆகவே குழந்தைக்காக தனக்கு வேண்டிய உணவின்றியே பாலூட்டும் படி தாயையோ, அல்லது சக்திக்கு அதிகமாகக் கொடுக்கும் படி தந்தையையோ துன்புறுத்தப்படமாட்டாது.''** **(**அல்குர்ஆன்-அல்பகரா:233**)**

இவ்வசனத்தினூடாக விவாகரத்துப் பெற்ற மனைவியாக இருந்தாலும் பராமரிப்பு தொடர்பில் நியாயமான முறையில் அதனை தன் கணவனிடம் பெற்றுக் கொள்ளும் உரிமையையும் அதே போல் கணவன் தன் வசதிக்கும், சக்திக்கும் ஏற்றாற் போல் தான் தன் மனைவிக்குரிய பராமரிப்பினை வழங்க வேண்டும் என்பதாகவும் இரு சாராரது உரிமைகளையும் பாதிக்காத அமைப்பிலேயே அல்லாஹ் சட்டங்களை விதியாக்கியுள்ளதை காணக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறாக, இஸ்லாம் தலாக் சொல்லப்பட்ட மனைவிக்கான இத்தாக் காலத்திற்குரிய தாபரிப்பு, குறித்த மனைவி அக்காலததில் கர்ப்பிணியாக இருப்பின் அவள் குழந்தையை பெற்றுக்கொள்ளும் வரையில், குறித்த குழந்தைக்கு பாலூட்டினால் அக்காலத்திற்குமான உணவு, உடை மற்றும் இருப்பிடம் போன்ற சகல அடிப்படைத் தேவைகளையும் நிறைவு செய்து கொடுத்து அவளைப் பராமரிப்பது கணவனின் கடமை என்பதை தெளிவுபடுத்தியுள்ளது. மேலும் குறித்த கணவன் தனது சக்திக்கும் உழைப்பிற்கும் ஏற்ற வகையில் தன் மனைவிக்கான பராமரிப்பினை மேற்கொள்ள வேண்டுமெனவும் பணித்துள்ளது.

இவ் இஸ்லாமிய இத்தாக் கோட்பாட்டுடன் அடம்பன் பிரசேத்தில் தலாக் பெறப்பட்டு இத்தாவில் இருந்த பெண்களின் நடைமுறைகளை நோக்கும் போது கணவரின் வீட்டிலேயே தங்களது இத்தாக் காலத்தை அனுஷ்டிக்கின்றனர். இதனையே இஸ்லாம் விரும்புகின்றது.

சில பெண்களோ தனது கணவனை விட்டுப் பிரிய வேண்டும் என்ற நோக்கத்துடன் தமது தாயின் வீட்டிலேயே இத்தாவை அனுஷ்டிக்கின்றனர். இந்நிலையானது இஸ்லாமிய ஷரீஅத்திற்கு முற்றிலும் மாறுபட்ட அமைப்பிலேயே காணப்படுகின்றது. இதன் மூலம் தலாக் மூலம் பிரிந்துவிட்ட கணவன், மனைவி ரஜ்இய்யத்தான தலாக்கின் இத்தாக்கால எல்லைக்குள் மீண்டும் இணைவதற்கான சாத்தியப்பாடுகள் முற்றாக அற்றுப்போகின்றது. இந்நிலை சமூகத்தில் தலாக்கின் எண்ணிக்கையை அதிகரிக்க வழி வகுக்கின்றது. பெண்களுக்கு இந்நடைமுறைகள் தவறானது என்பதை உணர்த்தி தெளிவினை வழங்கப்பட்டுள்ளது.

இப் பெண்களின் இத்தாத் தாபரிப்பு தொடர்பாக ஆராயும் போது 80மூ மானவர்கள் காழி நீதிமன்றத்தில் காழியிடம் முறையிட்டு தங்களது இத்தாக் காலத் தாபரிப்பை தங்களது கணவரிடமிருந்து பெற்றுக் கொள்கின்றனர். இத்தாபரிப்பானது அவர்களின் கணவனின் வசதிக்கேற்றவாறு வழங்குகின்றனர். இதனைக் கொண்டு அவர்கள் தமது இத்தாக் காலச் செலவினைக் கொண்டு செல்கின்றனர். இத்தாபரிப்பானது அவளின் செலவிற்கு போதுமானதாகக் காணப்படுகின்றது.

இதுவே இஸ்லாம் கூறும் இத்தாக் கோட்பாடுகளாகும். இவற்றோடு அடம்பன் பிரதேசத்தில் இத்தா இருக்கும் பெண்களின் நடைமுறைகள் ஓரளவிற்கு இயைந்து செல்கின்றன.

**பிரதான கண்டுப்பிடிப்புக்கள்**

அடம்பன் பிரதேசத்தில் இத்தாவிலிருந்த பெண்களிடம் வினவப்பட்ட கேள்விகளின் விளைவாகவும், அவர்களிடம் கலந்துரையாடப்பட்டதன் மூலமும் அவர்களிடையே இஸ்லாமிய இத்தா தொடர்பான அறிவு " புரணமாகக் காணப்படவில்லை, ஆனால் அவர்களுக்கு தெரிந்த அமைப்பில் தமது இத்தாக் காலத்தைப் " புரணப்படுத்துகின்றனர். இவர்களுக்கு இஸ்லாமிய போதனைகள் நடாத்தப்படாமையினாலும், இஸ்லாமிய கலந்துரையாடல்கள் நடாத்தப்படாமையினாலும் இது தொடர்பான " புரண அறிவு தம்மிடம் இல்லாததாக முறைப்படுகின்றனர்.

அடம்பன் பிரதேசத்தில் இது வரையில் எவ்வித இஸ்லாமிய ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை இதுவே முதல் ஆய்வாகக் காணப்படுகிறது. அல்ஹம்துலில்லாஹ். இவ்வாய்வானது எதிர்காலத்தில் அடம்பன் பிரதேசத்தில் ஆய்வு செய்யக்கூடியவர்களுக்கு உதவியாக அமையும்.

மேலும் ஆய்வின் நோக்கமான அடம்பன் பிரதேசத்தில் இத்தாவிலிருந்த பெண்களின் நடைமுறைகளைப் பரீசீலித்ததன் மூலமும், அவர்களின் நடைறைகள் இஸ்லாமிய கோட்பாடுகளோடு இயைந்து செல்கின்றதா? என்பதனை ஒப்பீட்டு ரீதியாகப் பார்க்கும் போதும்

ஓரளவு இஸ்லாமிய இத்தாக் கோட்பாடுகளைப் பின்பற்றுகின்றனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

**பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகள்**

- அடம்பன் பிரதேசத்தில் இஸ்லாமிய போதனைகள் நடத்துவதற்கு வழியமைக்க வேண்டும். இவ்வழிகாட்டல்களை ஆண்களுக்கும், பெண்களுக்கும் என்று பிரத்தியேகமான முறையில் வழிகாட்டுவதன் மூலம் இவர்களை இஸ்லாமிய அமைப்பினுள் கொண்டு வர முடியும்.

- அடம்பன் பிரதேசத்தில் துண்டுப் பிரசுரங்கள் கொடுத்து சமூகத்தின் மத்தியில் இஸ்லாமிய குடும்பச் சூழலின் அவசியம் பற்றிய வழிகாட்டல்களை வழங்குவதோடு அதற்காக வாராந்தம் ஜம்ஆ பிரசங்கங்களில் சமூகத்திற்கு தேவையான விடயங்களின் தெளிவுகளை வழங்க வேண்டும்.

- அடம்பன் பிரதேசத்துப் பெண்களிடம் காணப்படும் இஸ்லாமிய சந்தேகங்களைக் கேட்டறிந்து அதற்கான சரியான தெளிவான விடைகள் கொடுக்கப்பட வேண்டும்.

- எதிர்காலத்தில் அடம்பன் பிரதேசத்தில் இதே போன்ற இஸ்லாமிய ஆய்வுகளை கற்கும் மாணவர்கள் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

- அடம்பன் பிரதேசத்து மக்கள் தமது கருத்துக்களை வழங்கி தம்மால் இயன்ற ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

- இது வரை காலமும் அடம்பன் பிரதேசத்தில் இஸ்லாமிய ஆய்வுகளை மேற்கொள்ளாததனால் ( தலாக், பலதாரணம், திருமணம், இஸ்லாமிய தொழில்கள்) இவ்வாறான புதிய தலைப்புக்களில் ஆய்வாளர்கள் ஆய்வினை மேற்கொள்ள முடியும்.

- 

**உசாத்துணைகள்**

Abu khadeeja Abdul wahid (2018) . *Divorce , Three Talaqs in one sitting taking one's wife back , waiting period and Remarriage* . Retrieved (2019.11.14) from http;//www.abukhadheeja . com

Al sayh Ali Ahamed Abdul al tahtawi , (2008). *Aqwal al a immah al fiqat fi ahkam al janaiz wal amwat, Dar Al kotab Al ilmiyah 7. Ibn tymiyyah, (2011) fatwa al nisa* , Dar Al kotab Al ilmiyah –beirut 8

Busary Mashood DR (2017) . *Iddatu't talaq and Iddatu'ul wafat. A Re literpretation of the phrase" hatta yalavna hamlahunna* . Retrieved (2019. 11.20) from http;//www.grin.com

Hawting G.R (2009 ) . *The role of quran and hadhidh in the legal controversy about the rights of a divorced woman during her "waiting period " iddah* . Retrieved (2019.11.05) from google scholar.scholar. com.

Rostamy T.L (2009 ) . *A Compare study of Iddah in Iran and other countries* .Retrieved (2019 .11.05) from https;// www.sid .ir/ en/journal /view paper.

Steem carny (2017) . *Wisdom of iddah can prevent cervical cancer*. Retrieved (2019. 11.20) from http;// steemit.com/ science

அஷ்ஷெய்க் ஸைய்யத் சாபிக் (2017) இஸ்லாமிக் பௌன்டேசன் டிரஸ்ட்.

முஸ்தபா, எம். ஆர். எம். (2005). *முஸ்லிம் பெண்களுக்கு*. சென்னை: யுனிவர்ஸ் பப்ளிகேசன்.

**நேர்காணப்பட்டவர்கள்:**

ஆஸியா உம்மா (2020.04.06)

கவுது முஹம்மது (2020.04.12) அடம்பன் பிரதேசத்து வரலாறு

கலந்தர் பீபி (2020.03.24) சொர்ணபுரி, அடம்பன்.

கனி கபீர் ஓய்வு பெற்ற அதிபர் (2020.02.15)

மௌலவி இர்ஸான் (2020.04.20)

மௌலவி நிப்ராஸ் (2020.04.02) சொர்ணபுரி, அடம்பன்.